بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 18/03/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 14**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ۝۲ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝۳ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ۝۴ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ۝۵

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۝۶ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ۝۷

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக்[ரலி] அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளின் குறிப்பில், ஸகாத் கொடுக்க மறுத்தவர்கள் பற்றி தபரீ வரலாற்று நூலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: பொய் நபித்துவ வாதம் புரிந்த துலைஹா பின் குவைலதிடம் அஸத், கத்ஃபான் மற்றும் தே ஆகிய கோத்திரங்கள் ஒன்றிணைந்தன.

ஃபஸாரா, ஸஃலபா பின் சஃத், மர்ரஹ், அபஸ், பனூ கனானா, ஸுல் கிஸ்ஸா, லைஸ், தைல் மற்றும் மத்லஜ் ஆகிய கோத்திரங்களின் பிரதிநிதிக்குழுக்கள் மதீனா வந்தன. அந்த மக்கள் ஹஸ்ரத் அப்பாஸ்[ரலி] அவர்கள் தவிர, இதர மதீனத்துத் தலைவர்களிடம் தங்கினார்கள். பிறகு, அவர்கள் அந்த மக்களின் ஒரு பிரதிநிதிக்குழுவை உருவாக்கி, ‘அந்த மக்கள் தொழுது வருவார்கள். ஆனால், ஸகாத் கொடுக்க மாட்டார்கள்’ எனும் நிபந்தனையின் பேரில் ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்களிடம் அழைத்துச் சென்றார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்கள், ‘இவர்கள் ஒட்டகத்தைக் கட்டும் கயிற்றைக் கொடுக்கவில்லை என்றாலும், நான் இவர்களுடன் ஜிஹாத் செய்வேன்’ என்று கூறினார்கள். இந்தப் பிரதிநிதிக் குழுக்கள் ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்களின் உறுதிப்பாட்டைக் கண்டதும் மதீனாவிலிருந்து திரும்பிச் சென்று விட்டன.

**வாழ்க்கை வரலாற்றாசிரியர் ஒருவர் இவ்வாறு எழுதுகிறார்:** மதீனாவை விட்டுச் செல்லும் போது இரண்டு விஷயங்கள் அவர்களின் சிந்தனைகளில் இருந்தன. **ஒன்று** ஸகாத் கொடுக்க மறுப்பது தொடர்பாக, கலீஃபா அவர்கள் தமது கருத்து மற்றும் உறுதிப்பாட்டிலிருந்து பின்வாங்குவார்கள் என்ற எந்த நம்பிக்கையும் இல்லை. **இரண்டு** முஸ்லிம்களின் பலவீனம் மற்றும் எண்ணிக்கைக் குறைவைப் பொன்னானதாகக் கருதி, இஸ்லாமிய அரசு வீழ்ந்து விடும் வண்ணம், மதீனா மீது பயங்கரமான தாக்குதல் தொடுக்க வேண்டும் என்பது, அவர்களின் நினைப்பாக இருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்களும் கவனமற்றவராக இருக்கவில்லை. அன்னார் மதீனாவின் எல்லா எல்லைகளிலும் முறையாக காவல் நியமித்து விட்டார்கள். வெறும் மூன்று இரவுகள்தான் கழிந்தன. அதற்குள் ஸகாத் கொடுக்க மறுத்தவர்கள், இரவானதும் மதீனா மீது தாக்குதல் தொடுத்துவிட்டார்கள். ஆனால், முஸ்லிம்கள் எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்து விட்டார்கள்.

மதீனாவிலிருந்து 40 மைல் தொலைவில் ஸுல் கிஸ்ஸா எனும் இடத்தில் இருந்த, தாக்குதல் தொடுப்பவர்களின் கூட்டாளிகள் அவர்களுக்கு உதவி செய்ய வந்தார்கள். இதற்கிடையில், ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்களும் தமது படையை

ஆயத்தப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தார்கள். இரவின் பிற்பகுதியில் கடுமையான போர் நடைபெற்றது. விடிவதற்குள் ஸகாத் கொடுக்க மறுத்தவர்கள் தோல்வியைத் தழுவி ஓடிவிட்டார்கள். இது, அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வழங்கிய முதல் வெற்றியாகும்.

**இந்தப் போரை பத்ர் யுத்தத்துடன் ஒப்பிட்டு, ஓர் எழுத்தாளர் இவ்வாறு எழுதுகிறார்:**

இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்கள் ஈமான், நிச்சயவுறுதி, மனவுறுதி மற்றும் உறுதியாக நிலைநிற்றல் ஆகியவற்றை எந்த அளவு மேற்கொண்டார்கள் என்றால், முஸ்லிம்களின் உள்ளங்களில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்[ஸல்] அவர்களின் காலத்து யுத்தங்களின் நினைவு புத்துணர்ச்சிப் பெற்றுவிட்டது. எவ்வாறு பத்ர் யுத்தம் தொலை நோக்கு விளைவுகளைக் கொண்டிருந்ததோ, அவ்வாறே இந்தப் போரிலும் முஸ்லிம்களின் வெற்றி இஸ்லாத்தின் எதிர்காலத்தின் மீது ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

பனூ ஸுப்யான், பனூ அபஸ் மற்றும் இதர கோத்திரங்கள் இந்தத் தோல்வியின் காரணமாக, கோபத்தில் கொந்தளித்து தமது ஊர்களில் இருக்கும் முஸ்லிம்கள் மீது திடீர்த்தாக்குதல் தொடுத்து, முற்றிலும் கருணையற்ற முறையில் அவர்களுக்குப் பலவகையான தண்டனைகளைக் கொடுத்து ஷஹீதாக்கிவிட்டார்கள். இந்த அநீதிகள் குறித்து தகவல் கிடைத்த போது, ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்கள், 'பழிவாங்கும் விதமாக, ஒவ்வொரு கோத்திரத்தில் இருந்தும், முஸ்லிம்களைக் கொன்ற கொலையாளிகளைக் கொன்று விடுவார்கள்' என்று சத்தியம் செய்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்களின் தலைமையில், ஸகாத் கொடுக்க மறுத்தவர்களின் தாக்குதல்களுக்கு முடிவுகட்டப்பட்ட உடனேயே, சஞ்சலங்களிலில் இருந்த ஏனைய கோத்திரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக தமது ஸகாத்தை எடுத்துக் கொண்டு மதீனாவை நோக்கி வர ஆரம்பித்தன. தபரீ வரலாற்று நூலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அந்தக் காலத்தில் எந்த அளவு சதக்காக்கள் மதீனாவிற்கு வந்தடைந்தன என்றால், அவை முஸ்லிம்களின் தேவை போக மீதமாகிவிட்டன.

**பிறகு, தோல்வியடைந்த கோத்திரங்களின் போக்கு பற்றி, ஓர் எழுத்தாளர் இவ்வாறு எழுதுகிறார்:**

அபஸ், ஸுப்யான், கத்ஃபான், பனீ பக்ர் மற்றும் மதீனாவின் அக்கம் பக்கங்களில் வசித்து வந்த பிற, கிளர்ச்சி செய்யும் கோத்திரங்கள் தங்களுடைய பிடிவாதம் மற்றும் கிளர்ச்சியை விட்டும் விலகியிருந்திருக்க வேண்டும். ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுவதாகவும் இஸ்லாத்தின் கடமைகளை நிறைவேற்றுவதாகவும் உறுதி கூறியிருக்க வேண்டும்.

ஆனால், முஸ்லிம்கள் மீதான பகைமை அவர்களின் கண்களைக் குருடாக்கி விட்டிருந்தது. அவர்கள் தங்களது நாடுகளை விட்டுவிட்டார்கள். பனூ அஸத் கோத்திரத்தின் பொய் நபித்துவ வாதியான துலைஹா பின் குவைலதுடன் சென்று சேர்ந்தார்கள். அவர்கள் சென்றடைந்ததன் காரணமாக 'துலைஹா' மற்றும் 'முஸைலமா' வின் ஆற்றலும் பலமும் அதிகரித்து விட்டது. ஏமனில் கிளர்ச்சியின் நெருப்பு கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது.

*இதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்! அந்த மக்கள் கிளர்ச்சி செய்தார்கள்; போர் புரிந்தார்கள். வெறும் எந்தவொரு வாதத்தினாலும் அல்லது யார் வாதம் புரிந்ததனாலும் இந்தப் போர் நடைபெறவில்லை. கிளர்ச்சிக்கும் போருக்கும் பழிவாங்கப்பட்டது.*

**ஸகாத் கொடுக்க மறுத்தவர்களை வெற்றி பெற்றது மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்களின் வீரம் மற்றும் உறுதிப்பாட்டைப் பற்றிக் குறிப்பிட்டவாறு அப்துல்லாஹ்**

**பின் மஸ்ஊத்**[ரலி] **அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்[ஸல்] அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு நாங்கள் எத்தகைய இடத்தில் நின்றிருந்தோம் என்றால், அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்கள் மூலமாக எங்களுக்கு உதவி புரியாமல் இருந்திருந்தால், நிச்சயம் அழிவு ஏற்பட்டிருக்கும். முஸ்லிம்களாகிய நாங்கள் அனைவரும் முழுமையாக ஒன்றுபட்டு, 'நாங்கள் எங்களுக்கு முழுமையான வெற்றி கிடைக்கும் வரை, ஸகாத்தின் ஒட்டகங்களுக்காக மற்றவர்களுடன் போரிட மாட்டோம். அல்லாஹ்வை வணங்குவதில் ஈடுபடுவோம்' என்று நினைத்தோம். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்கள் ஸகாத் கொடுக்க மறுத்தவர்களுடன் போர் செய்வதற்கான உறுதியான எண்ணம் கொண்டு விட்டார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத்**[ரலி] **அவர்கள் தக்வாவின் படித்தரங்களை எடுத்துரைத்த வண்ணம் இவ்வாறு கூறினார்கள்:** ஸகாத் எந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அஹ்மதிகள் நினைவில் கொள்ள வேண்டும். மேலும், அதை முறையாகப் பேண வேண்டும். இறைவன் தொழுகைக்குப் பிறகு இதற்கான கட்டளையைப் பிறப்பித்துள்ளான்.

**கிலாஃபத் திட்டம் தொடர்பாக ஓரிடத்தில் அன்னார் கூறுகிறார்கள்:** ஸகாத் தொடர்பாக, 'இந்தக் கட்டளையோ ஹஸ்ரத் நபிகள் நாயகம்[ஸல்] அவர்களுக்குப் பிறப்பிக்கப்பட்டது; எவர்களுக்குப் பெறுவதற்கான கட்டளை இடப்பட்டிருந்ததோ அவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள்' என்று ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்கள் மீது ஆட்சேபனை செய்யப்பட்டது. இதற்கு ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்கள் இவ்வாறு பதில் அளித்தார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்[ஸல்] அவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள். ஆனால், ஷரீஅத் நிலை பெற்றுதானே உள்ளது. மேலும், இப்போது கலீஃபா முன்னிலை படுத்தப்பட்டுள்ளார். ஆகவே, இத்துடன் கருத்தொருமித்து நான் கூறுகிறேன்: இன்று நான் முன்னிலை படுத்தப்பட்டுள்ளேன். மேலும், இந்த அடிப்படை விதியே எப்போதும் கிலாஃபத்துடன் இருக்கும்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத்**[ரலி] **அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இதையும் கூறினார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்[ஸல்] அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு, வெறும் மூன்று இடங்களில் மட்டுமே பள்ளிவாசல்களில் ஜமாஅத்தான தொழுகை நடந்து வந்தது என்று வரலாற்றில் வருகிறது. நாட்டின் பெரும்பாலான மக்கள் ஸகாத் கொடுக்க மறுத்து விட்டார்கள். அவர்கள், 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்[ஸல்] அவர்களுக்குப் பிறகு, நம்மிடம் ஸகாத் வாங்குவதற்கு யாருக்கு என்ன உரிமை இருக்கிறது?' என்று கேட்டு வந்தார்கள். ஸகாத் விவகாரத்தில் உள்ள கருத்து வேறுபாடு காரணமாக, அரபு நாட்டின் ஆயிரக்கணக்கான மக்கள் முர்த்தத் ஆகிவிட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்களுக்கு, 'முஸைலமா ஒரு லட்சம் பேர் கொண்ட படையுடன் தாக்குதல் தொடுக்க வந்து கொண்டிருக்கிறான்' என்ற தகவல் கிடைத்தது. அப்போது சில ஸஹாபா ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்களுக்கு, 'தாங்கள் ஸகாத் கேட்க வேண்டாம். அந்த மக்களுடன் சமரசம் செய்து கொள்ளுங்கள். இதையே நேரம் எதிர்பார்க்கிறது' என்று ஆலோசனை வழங்கினார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்கள், 'நான் அவர்களை ஸகாத் கொடுப்பதற்காக சம்மதிக்க வைக்காத வரை, அவர்களுடன் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ள மாட்டேன்' என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத்**[ரலி] **அவர்கள் கூறுகிறார்கள்:** ஆக, உண்மையான ஈமானுக்கு இதுவே அடையாளம் ஆகும். இந்த ஈமானே நம்மில் இருக்கும் என்றால், நம்மால் உலகில் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை எட்ட வைக்க முடியும். மேலும், வெற்றி பெறுவோம். இன் ஷா அல்லாஹ். அன்னார் கூறுகிறார்கள்:

எவ்வாறு தொழுகை, நோன்பு ஆகியவற்றிற்கான கட்டளைகள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்[ஸல்] அவர்களுடன் முடிவடைந்து விடவில்லையோ, இவ்வாறே சமுதாய மற்றும் நாட்டின் நிர்வாகத்துடன் தொடர்புடைய கட்டளைகளும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்[ஸல்] அவர்கள் வஃபாத் ஆனதும் முடிவடைந்து விடவில்லை. ஜமாஅத்தான தொழுகை போன்று, எப்பொழுதும் முஸ்லிம்களில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்[ஸல்] அவர்களின் பிரதிநிதிகள் மூலமாக, இவற்றின் படி செயல்படப் பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்பது, இந்தக் கட்டளைகள் குறித்தும் அவசியமாகும். அசலான உண்மைத்துவம் இதுவே ஆகும்.

**பிறகு ஒரு சந்தர்ப்பத்தில், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத்[ரலி] அவர்கள் இதையும் கூறினார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்களின் காலத்தில், ஒரேயடியாக முழு அரபு நாடும் முர்தத் ஆகிவிட்டது. மக்கா, மதீனா மற்றும் ஒரு சிற்றூர் மட்டுமே மீதம் இருந்தன. மற்ற அனைத்து இடங்களின் மக்களும் ஸகாத் கொடுக்க மறுத்து விட்டார்கள். அவர்கள் படையை எடுத்துக் கொண்டு போர் செய்வதற்காகப் புறப்பட்டார்கள். சிலவிடங்களிலோ, அவர்களிடம் ஒருவொரு லட்சம் பேர் கொண்ட படையும் இருந்தது. ஆனால், இங்கு வெறும் பத்தாயிரம் பேர் கொண்ட ஒரு படை இருந்தது. அதைத் தமது வஃபாத்துக்கு அருகில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்[ஸல்] அவர்கள் ஹஸ்ரத் உஸாமா[ரலி] அவர்களின் தலைமையில் ரோம்நாட்டுப் பகுதிகளில் தாக்குதல் தொடுப்பதற்காக ஆயத்தப்படுத்தி இருந்தார்கள். மீதம் எஞ்சியிருந்த மக்களாக பலவீனமானவர்கள், வயோதிகர்கள் மற்றும் விரல் விட்டு எண்ணக்கூடிய சில இளைஞர்கள் இருந்தார்கள். இந்த சூழ்நிலையைப் பார்த்த பெரும் சஹாபாவின் ஒரு பிரதிநிதிக்குழு ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்களிடம், 'கிளர்ச்சி நீங்கும் வரை இந்தப் படையை நிறுத்தி வைக்க வேண்டும்' என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்கள் மிகவும் கோபத்துடன், 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்[ஸல்] அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்[ஸல்] அவர்கள் எந்தப் படைக்குப் புறப்படுவதற்கான ஆணை பிறப்பித்திருந்தார்களோ, அதைத் தடுத்துக் கொள்வதைத்தான், அபூகஹாஃபாவின் மகன் முதல் பணியாக செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா?' என்று கேட்டார்கள். அன்னார், 'நான் இந்தப் படையைக் கண்டிப்பாக அனுப்பியே தீருவேன். நீங்கள் எதிரிகளின் படையைக் கண்டு அஞ்சுகிறீர்கள் என்றால், தாராளமாக எனக்கு ஒத்துழைப்பதை விட்டு விடுங்கள். நான் தனியாவே எல்லா எதிரிகளையும் எதிர்கொள்வேன்' என்று கூறினார்கள். **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத்[ரலி] அவர்கள் கூறுகிறார்கள்:**

இது يَعْبُدُوْنَنِيْ لَا يُشْرِكُوْنَ بِيْ شَيْـًٔا என்ற வசனத்தின் உண்மைத்துவத்தின் பெரும் சான்றாகும். அதாவது, அவர்கள் என்னை வணங்குவார்கள். எவரையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். அதாவது, கிலாஃபத் மீது நிலைத்திருப்பவர்கள் அல்லது கிலாஃபத்துடன் இருப்பவர்கள். மேலும், இது கிலாஃபத் அமைப்புடன் தொடர்ந்து கொண்டிருக்கக்கூடிய; இனியும் தொடரக்கூடிய நிலைமையாகும்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத்[ரலி] அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்கள் எடுத்த தீர்மானத்தின் அருமையான விளைவுகள் வெளிப்பட்டது தொடர்பாக இவ்வாறு எழுதுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்கள் சஹாபாவின் விருப்பத்திற்கு மாற்றமாக, ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத்[ரலி] அவர்களின் படையை அனுப்பி வைத்து விட்டார்கள். அது 40 நாள்களுக்குப் பிறகு வெற்றிபெற்ற கம்பீரத்துடன் மதீனாவுக்குத் திரும்பி வந்தது. இறைவனின் உதவி மற்றும் வெற்றி இறங்கியதை அனைவரும் தங்கள்

**கண்களால் கண்டு விட்டனர். இதற்குப் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்கள் பொய் நபித்துவ வாதம் புரிந்தவர்களின் குழப்பதை அடியோடு அழித்து விட்டார்கள். இந்தக் குழப்பம் மண்ணோடு மண்ணாகிவிட்டது. இதற்குப் பிறகு, முர்தத்களுக்கும் இதே நிலைதான் ஏற்பட்டது.**

**பிறகு, 'ஏகத்துவத்தையும் தூதுத்துவத்தையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய, ஸகாத் கொடுக்க மறுப்பவர்கள் மீது எவ்வாறு வாள் ஏந்த முடியும்?' என்று கருத்து வேறுபாடு கொண்ட சஹாபாவிடம், மிகவும் துணிச்சலாக செயல்பட்டவாறு ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஒருவேளை இன்று ஸகாத் கொடுக்காமல் இருப்பதற்கு அனுமதி வழங்கிவிட்டால், மக்கள் மெல்ல மெல்ல தொழுகை மற்றும் நோன்பையும் விட்டுவிடுவார்கள். இஸ்லாம் வெறும் பெயரளவில் எஞ்சிவிடும். சுருக்கமாக, இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர்[ரலி] அவர்கள் ஸகாத் கொடுக்க மறுத்தவர்களை எதிர்கொண்டார்கள். விளைவு, அந்தக் களத்திலும் அன்னாருக்கு வெற்றி மற்றும் உதவி கிடைக்கப் பெற்றது. சீர்கெட்டுப் போயிருந்த அனைத்து மக்களும் நேர்வழிக்குத் திரும்பினார்கள்.**

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* **இப்போது இந்தத் தொடர், தொடர்ந்து கொண்டிருக்கிறது. இனி வருங்காலங்களில் எடுத்துரைப்பேன். இன் ஷா அல்லாஹ். இதற்குப் பிறகு ஒரு துஆவிற்காக வலியுறுத்திய வண்ணம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:**

**இன்றைய நாள்களில் உலகத்தின் நிலைமைகளுக்காக துஆக்கள் செய்து வாருங்கள். அவற்றில் குறை வைக்காதீர்கள். குறிப்பாக இவ்வாறு துஆ செய்யுங்கள்:**

**உலகம் தன்னைப் படைத்தவனை அடையாளம் கண்டு கொள்ளட்டுமாக! உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு இது ஒன்றே வழியாகும். அல்லாஹ் கருணை புரிவானாக! நமது துஆக்களையும ஏற்றுக் கொள்வானாக!**

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கடைசியில், ஜாமிஆ அஹ்மதிய்யா கனடாவின் முன்னாள் தலைமையாசிரியரும் முபல்லிக் இன்சார்ஜும் ஆன மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய மௌலானா முபாரக் நஸீர் சாஹிப் அவர்களின் வஃபாத் குறித்து அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு, அவர்கள் ஜமாஅத்துக்கு ஆற்றிய தொண்டுகள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்கள். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு, அவர்களுக்கு ஜனாஸா காயிப் தொழவைப்பதாக அறிவிப்பும் செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ

لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ

وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி அத்தாவுல் முஃக்னீ)**